திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : மாவட்டங்கள் தோறும் ஏற்படுத்தப்படுகிற இந்த ஆராய்ச்சி எப்போது முடியும் என்று அறியலாமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முடிப்பதாக உத்தேசமில்லை. தொடர்ந்து நடத்திக் கொண்டு இருக்க வேண்டும் என்பதுதான் அபிப்பிராயம்.

கண்காணிப்பு இல்லங்கள்

* 681 **கேள்வி.—திரு. எம். வி. கரிவேங்கடம் :** கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1961-62, 1962-63-ம் ஆண்டுகளில் முறையே கண்காணிப்பு இல்லங்களுக்கு அனுப்பப்பட்ட பெண் குற்றவாளிகள் எத்தனை பேர் ?

கனம் திரு. கோ. பூவராகன் : இம்மாநிலத்திலுள்ள மகளிர் ஒழுக்கக் கண்காணிப்பு இல்லங்களுக்கு 1961-62-ல் 109 மகளிரும், 1962-63-ல் 116 மகளிரும் அனுப்பப்பட்டனர்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : இந்த விடுதிகளிலிருந்து விடுதலை பெற்ற மகளிர்கள் விடுதலைக்குப் பிறகு அவர்கள் வாழ்க்கை வரலாறு என்னவாகிறது என்று நிர்ணயிக்க ஏதாவது வழிவகை செய்கிறார்களா ?

கனம் திரு. கோ. பூவராகன் : விடுதியில் இருக்கும்போது அவர்கள் வாழ்க்கையில் எப்படி இருக்கவேண்டுமென்று செம்மைப் படுத்த விடுதி இருக்கிறது. பிறகு செம்மையாக இருப்பார்கள் என்றுதான் அரசாங்கம் கருதுகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: பெண் குற்றவாளிகள் எப்படிப் பட்ட குற்றங்களை செய்திருக்கிறார்கள் என்ற விவரம் இருக்கிறதா ?

கனம் திரு. கோ. பூவராகன்: தற்போது என்னிடம் அந்த விவரங்கள் இல்லை. தனிக்கேள்வி போட்டால் சொல்கிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி : பெண் குற்றவாளிகளுக்கு கண்காணிப்பு இல்லங்களில் ஏதாவது தொழில் கற்றுக் கொடுக்கப்படுகிறதா ?

கனம் திரு. கோ. பூவராகன்: வேலை கொடுக்கப்படுகிறது.

MR. SPEAKER : No member seems to visit these institutions.